Deposition of Witness
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
ATHOOR

**CC.No. 66/2021**

**Deposition of PW.7 (LW.9)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | முருகன் | ஜாதி | : | |
| த/பெ | : | பிச்சை | தொழில் | : | கிராம நிர்வாக அலுவலகத்தில் கிராம உதவியாளர் |
| கிராமம் | : | சீவல்சரகு | சமயம் | : | |
| தாலுகா | : | ஆத்தூர் | வயது | : | 58/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 08.04.2026.

(1 முதல் 3 மற்றும் 5, 6 எதிரிகள் ஆஜர் இல்லை, பிரிவு 317 குவிமுச படி மனு தாக்கல் செய்து அம்மனு அனுமதிக்கப்படுகிறது)

**முதல் விசாரணை**

நான் தற்போது சீவல்சரகு கிராம நிர்வாக அலுவலகத்தில் கிராம உதவியாளராக வேலை பார்த்து வருகிறேன். கடந்த சுமார் 5 வருடத்திற்கு முன்பு ஒரு நாள் நான் சீவல்சரகு கிராமத்தில் கிராம உதவியாளராக வேலையில் இருந்தபோது என்னுடன் அன்றையதினம் கணேசன் என்பவரும் என்னுடன் இருந்தார். செம்பட்டி காவல்நிலையத்தில் இருந்து போலிசார் திருட்டு வழக்கில் ஒரு நபரை பிடித்து வைத்திருப்பதாகவும், ஆத்துப்பட்டி பிரிவுக்கு வரச்சொன்னார்கள். உடனே நானும், கணேசன் என்பவரும் ஆத்துப்பட்டி பிரிவுக்கு சென்றோம். அங்கு பாலாஜி என்பவரின் வண்டியை பிடித்து அவர் வைத்திருந்த செல்போனையும் இருசக்கர வாகனத்தையும் எங்கள் முன்னிலையில் கைப்பற்றினார்கள். அப்போது எதிரி பாலாஜி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் சாட்சியாக நானும், கணேசனும் கையெழுத்து செய்தோம். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது கையெழுத்து என்னடையது தான். அந்த கையெழுத்து மட்டும் **(அ.சா.ஆ.3/PW.7)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அன்றையதினம் நான் எதிரி பாலாஜியை பார்த்தேன். இன்றையதினம் நான் அவரை பார்க்கவில்லை. நான் அவரை பார்த்தால் அடையாளம் காண்பிப்பேன். இச்சாட்சி மூலம்

எதிரி பாலாஜியை அடையாளம் காண்பிக்க அரசு தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க அரசு தரப்பு முதல் விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

**Sd/-Thiru.S.Anbuthasan**
District Munsif cum Judicial Magistrate
Athoor